


## எறும்பு கற்பிக்கும் பாடம்

### வாசித்து அறிக.


எறும்புகள் மூலம் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய நற்பண்புகள் நிறைய உள்ளன. ஒழுக்கத்தையும் ஒழுங்கையும் எறும்புகள் மிக அருமையாகக் கற்றுத் தருகின்றன. ராணி எறும்பு, பணியாளர்கள் என தங்களுக்கென தனித்தனி ஒழுங்கைப் பின்பற்றுகின்றன. ஓர் அணி உணவு தேடவும் மற்றோர் அணி புற்று அமைக்கவும் என ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கின்றன. மேலும், வரிசையாகச் செல்வதில் எறும்புகளை மிஞ்சிய வேறு உயிரினம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒற்றுமையும் பகிர்தலும் எனும் குணம் நிறைந்த உயிரினம் எறும்பு. ஓர் எறும்பு உணவைக் கண்டுபிடித்தால் மற்ற எறும்புகளுக்குத் தகவலை அனுப்பும் ஆற்றல்மிக்கது. சோழ அரசன் தமது சேனைகளோடு வரும் தகவலைக்கூட ஓர் எறும்பு அனைத்து எறும்புகளுக்கும் கூறி, புற்றுக்குள் சென்றுவிடுமாறு செய்தது எனவும் கூறப்படுகின்றது.

உறுதியையும் நம்பிக்கையையும் எறும்புகள் வலுவாகக் கடைப்பிடிக்கின்றன. தன்னைவிட உருவில் பெரிய உணவையும் தடையின்றி எடுத்துச் செல்லும் ஓர் எறும்பு, வழியில் மண் விரிசலைக் கண்டது. ஆனாலும், சிறிதும் அச்சம் கொள்ளாமல் விரிசலுக்கிடையில் உணவையே பாலமாக வைத்து கடந்து சென்று, மீண்டும் அந்த உணவை எடுத்துச் சென்றதாகக் கதை ஒன்றும் கூறப்படுகிறது.

சுறுசுறுப்பும் உழைப்பும் எறும்புகளுக்கே உள்ள சிறப்பான குணமாகும். எந்நேரமும் உழைத்து வாழும் பண்பினையும் சோம்பலின்றி இயங்கும் பண்பினையும் எறும்புகளிடம் காணலாம். திட்டமிட்டு வாழ்வதிலும் எறும்புகளுக்கு நிகர் வேறில்லை. மழைக்காலத்திற்கு முன்பே உணவுகளைப் புற்றில் சேமித்துக் கொள்கின்றன. வெள்ளம் வருமுன் அணைபோடு என்பதற்கு முதன்மை உதாரணமாகத் திகழ்வதே எறும்புகள்தான்.

இயல்பாகவே ஞானம் உள்ள எறும்புகளிடம் அரிய பல நற்பண்புகளை நாம் கற்றுக் கொள்ளலாம். இப்பண்புகள் யாவும் நம்மை வாழ்வில் சிறப்படையச் செய்யும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.




- ஒற்றுமையும் பகிர்தல் குணம்
- நம்பிக்கையின்மை
- அச்சம் கொண்டவை
- எறும்புகளிடம் நற்பண்புகள்
- ஒழுக்கமானவை
- உறுதியும் நம்பிக்கையும் கொண்டது
- வரிசையாகச் செல்லும்
- சோம்பல் குணம் கொண்டது
- ஞானம் உள்ளவை
- திட்டமிட்டு வாழும்
- சுறுசுறுப்பும் உழைப்பும் கொண்டது
- தகவல் அனுப்பும் ஆற்றல் கொண்டவை
- அச்சம் கொள்ளாதது
- மழைக்காலம் முன்பே உணவுகளைத் தேடும்

LIVEWORKSHEETS